கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை – 2020
(புதிய பாடத்திட்டம்)

(23) அரசியல் விஞ்ஞானம் I	Unit 03 A/L 2020 Rivision Index No.....

அறிவுறுத்தல்கள்

- இவ்வினாத்தாள் A மற்றும் B என்ற இரு பகுதிகளைக் கொண்டிருப்பதுடன் பகுதி A ஆனது பல்தேர்வு வினாக்களையும் பகுதி B ஆனது குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
- சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக பின்பற்றுக.

பகுதி A

1. அரசு பற்றிய **பொருத்தமான** சேர்மானம்.
   - A. அரசுகளுக்கு மத்தியிலான அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்.
   - B. இறைமையின் அடிப்படையில் ஒழுங்கமைந்த தாபனம்.
   - C. சமூக நிறுவனங்களுள் உயர்வான நிறுவனம்.
   - D. சமூகவியலின் மைய அம்சம்.
   - E. உலகமயமாக்களின் விளைவாக தேசிய அரசுகள் பலவீனமடையவில்லை.

   l. AB 2.ABC 3 BCD 4 DE 5 ACE ( )

2. அரசை விபரிப்பதற்கு பொருத்தமற்ற கூற்று
   1) சமூகத்தில் அரசின் மேலாதிக்கம் காரணமாகவே மக்கள் அரசுக்கு அடிபணிந்து அதனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்கின்றார்கள்.
   2) அதன் உறுப்புரிமை விருப்பத்தெரிவுக்குரியது.
   3) மனிதர்கள் அரசின் செல்வாக்குக்குட்படாமல் வாழ்வது கடினமானதாகும்.
   4) சமூக நிறுவனங்களுள் அத்தியவசியமானதாகும்.
   5) சமூகத்தை நிர்ப்பந்தப்படுத்துவதில் தனியுரிமையைக் கொண்டுள்ளது. ( )

3. அரசு என்பதற்கு பிழையான கூற்று
   1) ஒரு நிர்சயமான ஆள்புலத்தில் அரசியல்ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகமாகும்.
   2) சமூகத்திற்கு பின்னர் தோன்றியதாகும்.
   3) இறைமையின் ஒரே உரித்தாளியாகும்.
   4) அரசாங்கத்தின் அரசியல் கரமாகும்.
   5) வெளிவாரியான கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதில்லை. ( )

4. அரசின் பணிகளுக்குப் பொருந்தும் சேர்மானம்.
   - A. சட்ட உருவாக்கம் ,சட்டங்களை வரையறுத்தல்.
   - B. யுத்தப்பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்.
   - C. வரிகளை நிராகரித்தல்.
   - D. வறுமையை ஏற்படுத்தல்.
   - E. நாட்டின் பொருளாதாரத்தை அழிவுக்குட்படுத்தல்

   l. AB 2. BCD 3 CDE 4 ADE 5 AD ( )

MS. IJAS AHAMED

www.lkedu.lk

5. உலகமயமாதலும் அரசும் எண்ணக்கருவுக்கு மிகவும் **பொருத்தமான** கூற்று
   1) நவீன மார்க்சிசவாத பொருளாதார,அரசியல் மறுசீரமைப்புக்களின் ஒரு வெளிப்பாடாகும்.
   2) தேசிய அரசுகளின் இறைமை அதிகாரத்தை பலவீனப்படுத்தவில்லை.
   3) உலகமயமாக்கலானது தேசிய அரசுகளின் எல்லைகளை வரையறுத்துள்ளது.
   4) ஊலகமயமாக்கத்தினுள் தேசிய அரசுகள் இறுதி நிலையை அடையும்.
   5) நவீன அரசுகள் ஒற்றையாட்சி அரசாக செயற்பட வேண்டும் என அறிவுறுத்துகின்றது. ( )

6. கோத்திர அரசுமுறையின் பண்புகள்
   A. தற்போதைய சிக்கல்மிகுந்த சமூகங்களைப் போன்று முறையான அரசியல் நிறுவன கட்டமைப்புக்களை காண முடியும்.
   B. அரசியல் என்ற ஆட்சி அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப்பட்டது.
   C. உணவு மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தன்னிறைவு பெற்றிருந்தது.
   D. இவ்வரசு முறையில் குலத்தின் ஒற்றுமையை பேணிக் கொள்ள முடியவில்லை.
   E. இவ்வரசு முறையில் ஆட்சித் தலைவருக்கு வரையறையற்ற அதிகாரம் வழங்கப்பட்டது.
   1. AB 2. BCD 3 CDE 4 ADE 5 BC ( )

7. கிரேக்க நகர அரசின் **பண்புகள்.**
   A. நவீன கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்த அரச முறைமை.
   B. கோத்திர அரசு முறையின் பின்னர் அபிவிருத்தியடைந்த அரசியல் முறைமையில் ஒழுங்கமைந்த முதலாவது அரசு முறையாகும்.
   C. நகர அரசுகள் பிரதிநிதித்தவ ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்டது.
   D. மக்கள் தொகை, ஆள்புல ரீதியாக வரையறுக்கப்பட்ட சிறிய அரசியல் அலகுகளாக இருந்தமை
   E. பெண்கள், அடிமைகள்,குடியேற்றவாசிகளுக்கு பிரஜாவுரிமை கிடைக்கவில்லை.
   l. ABCD 2. BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE ( )

8. அரசாட்சி முறைக்கு பொருந்தும் சேர்மானம்.
   A. அரசன் அல்லது அரசி ஆட்சியதிகாரத்திற்கு வருவது பரம்பரையாக இருத்தல்.
   B. ஆட்சியாளன் மக்களின் விருப்ப படி சட்டங்களை உருவாக்குதல்.
   C. அரசாட்சியில் பிரஜைகள் என்ற எண்ணக்கரு நடைமுறையிலிருந்தது.
   D. பிரஜைகளுக்கு கடமைகள் காணப்பட்டன.
   E. இது உலகம் முழுவதும் கண்டு கொள்ளப்பட்ட அரச மாதிரியாகும்.
   l. AB 2. BCD 3 CDE 4 ACE 5 AE ( )

09-14 வரையான வினாக்களில் ஐந்து கூற்றுகள் உள்ளன. அவற்றில் வினாவின் தலைப்புக்கு பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.

9. தாராள ஜனநாயக அரசு பற்றிய **பிழையான கூற்று**
   1) மக்களால் தெரிவு செய்யப்படும் ஆட்சி முறையாகும்.
   2) எதேச்சதிகார அரசுக்கு எதிரானது.
   3) கலப்பு பொருளாதார முறையுடன் இணைந்த கருத்தியலாகும்.
   4) இதன் அடிப்படைப்பண்பு பிரதிநிதித்துவ ஜனநாயகமாகும்.
   5) முதலாளித்துவ பொருளாதார முறையையும்,ஜனநாயக ஆட்சிமுறையையும் ஒன்றிணைக்கின்றது. ( )

MS. IJAS AHAMED
www.lkedu.lk

10. சமவுடமைவாத அரசு பற்றிய **பிழையான கூற்று**
    1) முதலாளித்துவத்தினால் சுரண்டப்பட்ட தொழிலாளர்களுக்காக முன்வைக்கப்பட்ட அரச மாதரியாகும்.
    2) சுரண்டலற்ற வகுப்புவாதம் இல்லாத சமூகத்தை கட்டியெழுப்புதல் சமவுடமைவாத அரசின் நோக்கம்
    3) வர்க்கமற்ற சமூதாயத்தில் அரசு தேவையற்றது.
    4) தனியார் முயற்சி நிலைநிறுத்தப்படும்.
    5) ஒரு கட்சி முறை காணப்படும். ( )

11. பாசிச அரசின் **பண்புகள்.**
    1) அரசே ஆட்சியாளனாகும்.
    2) சட்டம் என்பது மக்களின் விருப்பன்று
    3) தனிதனிதனும் சமூகமும் அரசை விட உயர்வானவர்கள்
    4) மக்களின் அரசியல் பங்குபற்றுதல் நிராகரிப்பு
    5) தலைமைத்துவ வழிபாடு முக்கியம் பெறுகின்றது. ( )

12. **காலனித்துவ** அரசின் பண்புகள்
    1) 16ம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பிய சமூகங்களில் அபிவிருத்தி அடைந்த மாதரியாகும்
    2) காலனித்துவ அரசு குடியேற்ற வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளினால் தீர்மானிக்கப்படவில்லை.
    3) குடியேற்ற நாட்டின் எந்த வர்க்கத்தையும் தனது ஆட்சியின் பங்காளர்களாக கொண்டிருப்பதில்லை
    4) உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தனக்கு சார்பாக உபயோகித்தக் கொள்ளும்.
    5) காலனித்துவ அரசுக்கு எதிராக பல தேசிய இயக்கங்கள் தோன்றி கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. ( )

13. **சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் பிரதான பண்புகள்.**
    1) ஹொப்ஸ்,லொக்,ரூசோ போன்றோர் இக் கோட்பாட்டிற்கு உரிமையாளர்களாவர்.
    2) மூவரும் இங்கிலாந்தின் அரசியல் சூழ்நிலையில் தாக்குண்டே தமது கருத்துக்களை வெளியிட்டனர்.
    3) சமூக ஒப்பந்தமே அரசின் உருவாக்கம் என்பதில் உறுதியாய் நின்றது.
    4) உரிமை, சுதந்திரம், இறைமை ஆகிய எண்ணக்கருக்களின் தோற்றத்திற்கு வித்திட்டது.
    5) தெய்வீக உரிமை வாதத்தினை மழுங்கடிப்பதில் பங்களித்தது. ( )

14. **மாக்ஷிசக் கோட்பாட்டின் பண்புகள்**
    1) வர்க்கம் தோன்றிய போது அரசு தோன்றியது.
    2) தனிப்பட்டவர்களை விட சமூகத்தை முக்கியப்படுத்துகிறது.
    3) அரசு உலர்ந்து உதிர்ந்து விடும்.
    4) அரசு பொருளாதாரத்தில் தலையிடாது.
    5) உற்பத்தி பங்கீடு சமத்துவமாக பேணப்படும் ( )

MS.IJAS AHAMED

www.lkedu.lk

கடந்த கால வினாக்கள் 2015

சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

1. இறைமைக் கோட்பாடு
   A. அரசின் அதிகாரத்தோடு தொடர்புபடுகின்றது.
   B. ஏனைய சமூக தாபனங்களுக்கு மேலால் அரசின் உயர் தன்மையை வலியுறுத்துகின்றது.
   C. அரசின் சட்டங்களுக்கு சட்ட பூர்வத்தன்மையை வழங்குகின்றது.
   D. தேசிய அரசு முறையின் தோற்றத்தையும் இருப்பினையும் நியாயப்படுத்துகின்றது.
   E. கடவுளை அரசியலதிகாரத்தின் பிரதான மூலாதாரம் என ஏற்றுக்கொள்கின்றது.

   l. ABCD 2. BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE ( )

2. அரசாங்கம் என்பது
   A. அரசின் எஜமானாகும்.
   B. அரசின் முளையாகும்.
   C. அரசின் சார்பாக இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் முகவராகும்.
   D. அரசின் நடைமுறைக் கரமாகும்.
   E. அரசையும் மக்களையும் இணைக்கும் ஊடகமாகும்

   l. ABCD 2. BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE ( )

கடந்த கால வினாக்கள் 2016

பிழையான கூற்றைத் தெரிவு செய்க

3. அரசு என்பது
   1) விசேட அரசியல் கட்டமைவுகளை கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.
   2) சகல சமூக விஞ்ஞானங்களினதும் மையக் கருவாகும்.
   3) பொது நலன்களின் நாமத்தால் ஏனைய சகல சமூகத் தாபனங்களுக்கும் மேலாளுள்ள உயர் அரசியல் தாபனமாகும்.
   4) சர்தேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.
   5) தோற்றத்திலும் இயல்பிலும் வேறுபட்டதென வேறுபட்ட சிந்தனவாதக் குழுவினரால் நோக்கப்படுகின்றது. ( )

4. இறைமை அதிகாரம் என்பது
   1) அரசுக்கு மட்டும் உரித்தான உயர் அதிகாரமாகும்.
   2) தன்னிகரற்றதும் வரையறையற்றதுமான அதிகாரமாகக் கருதப்படுகின்றது.
   3) மனித சமூகமானது அரசு என கருதப்படுவதற்கு அத்தியவசியமாகும் மூலக் கூறாகும்.
   4) 1648 வெஸ்ட்பாலியா சமாதான உடன் படிக்கையின் மூலம் அரசுகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரமாகும்.
   5) அரசாக இருப்பதனால் அரசுக்கே உரித்தாகும் தனித்துவமான அதிகாரமாகும்.
   ( )

5 அரசாங்கம் என்பது
   1) அரசின் பொது நலன்களை செயற்பாடாக மாற்றும் அரசின் கரமாகும்.
   2) சட்டத்துறை,நிறைவேற்றுத்துறை,நீதித்துறை என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும்.
   3) அரசின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மக்கள் கூட்டமாகும்
   4) அதன் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது என பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
   5) மாற்ற முடியாத நிலையானதொன்றாகும். ( )

MS.IJAS AHAMED
www.hedu.lk

கடங்க கால வினாக்கள 2017

சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

6 அரசு என்பது

A. ஏனைய சமூக ஒழுங்கமைப்புக்கள் அனைத்தையும் விட மேலானதாகக் கருதப்படும் ஒரு மனித சமூகமாகும்.

B. இறைமை என்ற மேன்மையான ஆணையதிகாரத்தின் தனியான உரித்தாளனாகும்.

C. தேசங்களுக்கு மத்தியிலான அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.

D. தனக்கேயுரிய உத்தியோகப்பெயர்,தேசியகீதம்,தேசியக்கொடி என்பவற்றைக் கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.

E. அரசாங்கத்தின் அரசியல் கரமாகும்.

1. ABCD 2. BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE ( )

7. அரசாங்கம் என்பது

A. தேசிய மட்டத்தில் ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி என்ற அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.

B. அரசின் அதிகாரங்களையும் பணிகளையும் புரிவதற்கு பொறுப்பாக்கப்பட்ட அரசின் சேவகனாகும்.

C. அரசு என்ற கப்பலின் சுக்கானை இயக்குவதாகும்.

D. அரசின் ஆள்புலத்தில் வாழும் சகல மக்களையும் கொண்ட ஒரு மானிடச் சமூகமாகும்.

E. ஜனநாயக அல்லது புரட்சிகர முறைகளில் மக்களால் மாற்றியமைக்கப்படக் கூடிய ஓர் அரசியல் நிறுவனமாகும்.

1. ABCD2. BCDE 3 ABDE 4 ACDE 5 ABCE ( )

கடந்த கால வினாக்கள் 2018

சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

8. மக்கள் ஏன் அரசாக ஒழுங்கமைந்துள்ளனர்?

A. சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பாதுகாத்து பேணுவதற்காகும்.

B. சமூகத்தை ஆள்வதற்கான ஆட்சி முறையொன்றை ஒழுங்கமைப்பதற்காகும்.

C. தேசிய பாதுகாப்பை பேணிப்பாதுகாப்பதற்காகும்.

D. சமூகத்தின் பொருளாதார செயற்பாடுகளை முறையான பாங்கினில் ஒழுங்கமைப்பதற்காகும்.

E. மக்களின் இறைமையப் பிரயோகிப்பதற்கான நெறிமுறைத்தன்மையினை வழங்குவதற்காகும்.

1. ABCD 2. ABCE 3 ABDE 4 ACDE 5 BCDE ( )

9. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த சமூகமொன்றுக்கு அரசாங்கமொன்று ஏன் அவசியமாகின்றது?

A. சமூகப்பிணைப்பை பாதுகாத்து மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

B. சமூகத்தின் வறிய பகுதியினரின் நலன்களை மட்டும் பாதுகாத்து மேம்படுத்தி பேணுவதற்காகும்

C. மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தி பேணுவதற்காகும்.

D. சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு,சமூக நீதி ஆகியவற்றை பேணுவதற்காகும்.

E. பொருளாதார செயற்றினை மேம்படுத்தி வெளியக உறவுகளை நிர்வகிப்பதற்காகும்.

1. ABCD 2. ABCE 3 ABDE 4 ACDE 5 BCDE ( )

MS.IJAS AHAMED
www.ijas.lk

10. இறைமை என்பது
   A. அரசின் அதிகாரத்தோடு தொடர்பான அரசியல் கோட்பாடாகும்.
   B. தேசிய சர்வதேச அரசியலைக் கட்டுப்படுத்தும் பிரதான கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருவாகும்.
   C. சிவில் சமூகத்திற்கும் அதன் ஒருங்கமைப்புக்களுக்கும் அப்பால் அரசை தன்னிகரற்றதாக்கும் அரசியல் சித்தாந்தமாகும்.
   D. அரசின் விருப்பினை நடைமுறைப்படுத்துவதற்கான நெறிமுறைத் தன்மையை வழங்கும் அரசியல் கோட்பாடாகும்
   E. கமஷ்டி அரசியல் முறைமையொன்றின் கீழ் கூட தன்னகரற்றும் பராதீனப்படுத்த முடியாததுமாகும்.
   1. ABCD 2. ABCE 3 ABDE 4 ACDE 5 BCDE ( )

கடந்த கால வினாக்கள் 2019

11.நவீன சமூகங்களில் அரசாங்கமானது.
   A. ஒரு விபரிக்க முடியாத கருத்தாகும்.
   B. காலத்திற்கு காலம் மாற்றக்கூடியது.
   C. ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி ஆகிய இரு வகைகளில் ஒழுங்கமையக் கூடியது.
   D. அரசின் முகவர்
   E. அரசத்துவத்திற்கு அவசியமானதொரு மூலக் கூறு ஆகும்.
   1. ABCD 2. ABCE 3 ABDE 4 ACDE 5 BCDE ( )

MS. IJAS AHAMED

www.lkedu.lk

பகுதி B

1. அரசு என்ற சொல்லை முதன் முறையாக பயன்படுத்திய சிந்தனையாளரையும், அவருடைய நூலையும் முறையே குறிப்பிடுக.
   1) .....
   2) .....
2. "அரசின் உள்ளேயே மனிதன் வாழ வேண்டியவனாகின்றான் அரசினுள் வாழ முடியாத மனிதன் மிருகமாகவோ அல்லது கடவுளாகவோ இருக்க வேண்டும்"

   "அரசில் ஒருவன் வாழ்வதன் மூலமே நல்லவனாகின்றான் நல்ல மனிதன் ஒரு நல்ல அரசில் அன்றி வேறு எங்கும் வாழமுடியாது அரசு தரும் சமூக வாழ்க்கையில் ஒரு மனிதன் பங்கு கொள்ளாத வரை அவன் பூரணத்துவம் அடைய முடியாது" மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளையும் முன்வைத்த சிந்தனாளர்களை முறையே குறிப்பிடுக.

   1) .....
   2) .....
3. நவீன ஆள்புல பௌதீக அரசின் பண்புகள் இரண்டு தருக.
   1) .....
   2) .....
4. உலகமயமாதல் என்ற பதம் பயன்படுத்தப்பட்ட சஞ்சிகை, சிந்தனையாளர் முறையே குறிப்பிடுக.
   1) .....
   2) .....
5. உலகமயமாக்கலினால் ஏற்படும் பிரச்சினைகள் இரண்டு தருக
   1) .....
   2) .....
6. கோத்திர அரசு முறைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுக.
   1) .....
   2) .....
7. லிபரல் ஜனநாயக அரசின் பண்புகள் இரண்டு தருக.
   1) .....
   2) .....
8. இறைமையின் வகைகள் இரண்டினையும் குறிபிடுக.
   1) .....
   2) .....
9. தாராண்மைவாதத்தின் வகைகளை குறிப்பிடுக.
   1) .....
   2) .....
10. "**தேசங்களின் செல்வம்**" "**சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்**" மேற்கூறப்பட்ட நூல்களின் ஆசிரியர்களை முறையே குறிப்பிடுக.
    1) .....
    2) .....
11. அரசாங்கத்தின் துறைகள் இரண்டைக் குறிப்பிடுக.
    1) .....
    2) .....
12. "அரசு சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொது நலனுக்காக செயற்படுவதனால் இது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்வானது"

    "வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக் கூறும் மனிதக் குழு"

MS. IJAS AHAMED

www.ikedu.lk

மேற்கூறப்பட்ட இரு கூற்றுகளுடனும் தொடர்புபடும் அறிஞர்களைக் குறிப்பிடுக.

1) .....
2) .....

13. அரசுக்கு பிரஜைகள் அடிபணிவை காட்ட வேண்டும் எனக் கூறும் கோட்பாட்டாளர்கள் இருவரைப் பெயரிடுக.

1) .....
2) .....

14. சமூக ஒப்பந்தக்கோட்பாடு இரு சமூக முறைமைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அந்த இரண்டு சமூக முறைமைகளையும் குறிப்பிடுக. (2012)

1) .....
2) .....

15. பின்வரும் இரு கூற்றுகளும் அரசின் தோற்றம் பற்றிய இரு கோட்பாடுகளுடன் தொடர்பானவையாகும். அவற்றை இனங்கண்டு பெயரிடுக. (2017)

"அரசு என்பது வரலாற்று வளர்ச்சியின் மெதுவான ஆனால் தொடர்ச்சியான பெறுபேறாகும்".

"அரசு என்பது இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர்களால் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகும்"

1) .....
2) .....

16. மார்க்சிசக் கோட்பாடானது அரசின் தோற்றம் படிமுறை, முடிவு என்பன தொடர்பான ஐந்து கட்டங்களை குறிப்பிடுகின்றது. அதன் இறுதி இரண்டு கட்டங்களைக் குறிப்பிடுக.(2018)

1) .....
2) .....

17. சமூக ஒப்பந்தக் கோட்பாடானது அரசின் தோற்றம் பற்றிய ஓர் அரசியல் கோட்பாடாகும்.இக் கோட்பாட்டின் மூலகர்த்தா தனிமுதன்மையான முடியாட்சியை முன்மொழிந்ததோடு மற்றையவர் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை ஆதரித்தார் அவ்விருவரின் பெயர்களையும் குறிப்பிடுக. (2018)

1) தனிமுதன்மையான முடியாட்சி: .....
2) பிரதிநிதித்துவ அரசாங்கம் .....

MS. IJAS AHAMED

www.lkedu.lk

23 அரசியல் விஞ்ஞானம்
வினாத்தாள் II

1.பின்வருவனவற்றுள் இரண்டினைப் பரிசீலிக்குக

I. அரசு பற்றிய லிபரல்வாதக் கருத்து
II. அரசு பற்றிய மாக்ஷிசக் கருத்து
III. அரசு பற்றிய பாசிசக் கருத்து.
IV. அரசு பற்றிய பெண்ணிலைவாதக் கருத்து
V. அரசு – பிரஜை தொடர்பு (10x2=20 புள்ளிகள்)

2. அரசு சமூகத்தின் அரச அதிகாரத்தின் மைய நிறுவனமாகும் ஆராய்க. (20 புள்ளிகள்)

3. அரசானது சமூகத்திலுள்ள உயர் நிறுவனமாக ஏன் கருதப்படுகின்றது. (20 புள்ளிகள்)

4.பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க.

I. கோத்திர அரசு
II. அரசாட்சி முறையின் பண்புகள்
III. நவதாராண்மைவாத அரசு
IV. காலணித்துவ அரசின் பண்புகள்
V. கிரேக்க நகர அரசு

5.தேசிய அரசுகள் உலகமயமாக்கல் மூலம் எதிர் நோக்கும் சவால்களை ஆராய்க

(20 புள்ளிகள்)

6.சமூக ஒப்பந்த கோட்பாடு தொடர்பான தோமஸ் ஹொப்ஸ்,ஜோன் லொக் ஆகியோரின் கருத்துக்களை பின்வரும் தலைப்புகளின் ஒப்பிடுக.

I. இயற்கை நிலை
II. சிவில் சமூகம்

MS. IJAS AHAMED

www.lkedu.lk